Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 30.7.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 30.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மாநிலங்களவையில் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து நேற்று தொடங்கிய சிறப்பு விவாதம் இன்று, தொடர்ந்து இடம் பெற்றது.

பகவான் புத்தருடன் தொடர்புடைய உடல் எச்சங்கள் மற்றும் புனித பொருட்கள், 127 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் இந்தியாவிற்கு திரும்பி இருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

பள்ளிகளில், நிஜமான கற்றல் நிகழ்வதை உறுதிப்படுத்தும் வகையில், கல்வித் துறை மறுவரையறை செய்யப் படுவதாக, பிரதமர் கூறி உள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தின் கீழ், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான நிதி உதவிகளை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார்.

*மாநிலங்களவை-சிந்தூர்*

மாநிலங்களவையில் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து நேற்று தொடங்கிய சிறப்பு விவாதம் இன்று, தொடர்ந்து

நடைபெற்றது. ராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டதில் எந்த ஒரு மத்தியஸ்தமும் இருக்கவில்லை என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில் கூறினார். பகல்ஹாம் தீவிரவாத தாக்குதலுக்கு பின்னணியில் இருந்த, TRF அமைப்பை, தீவிரவாதக் குழுவாக அமெரிக்கா அறிவித்து இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் தீவிரவாத சம்பவங்களுக்கு இடையிலேயே அண்டை நாட்டுடன் வர்த்தகம் நடைபெற்று வந்ததாக அவை முன்னவர் திரு ஜே பி நட்டா குற்றம் சாட்டினார். இந்தியாவின் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக பிஜேபி உறுப்பினர் டாக்டர் கே லக் ஷ்மன் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்தியாவின் ராஜீயத் துறை, மோசமான முறையில் தோல்வி அடைந்ததாக, காங்கிரஸ் உறுப்பினர் திரு அகிலேஷ் பிரசாத் சிங் கூறினார். திமுக உறுப்பினர் திரு என் ஆர் இளங்கோ, திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் திருமதி டோலா சென், தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த திரு பீடா மஸ்தான் ராவ், ஆர்ஜேடி உறுப்பினர் திரு மனோஜ் ஜா, சமாஜ்வாதி கட்சியைச் சேர்ந்த திருமதி ஜெயா பச்சன், உட்பட பலரும் விவாதங்களில் பங்கேற்றுப் பேசினர்.

புத்தர்-மோடி

பிரிட்டிஷ் ஆட்சியின் போது இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட, பகவான் புத்தருடன் தொடர்புடைய உடல் எச்சங்கள் மற்றும் பிப்ராஹ்வா பழம் பொருட்கள், 127 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் இந்தியாவிற்கு திரும்பி இருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். புத்த பகவான் தொடர்பான புனிதப் பொருட்கள், இவ்வாண்டு ஆரம்பத்தில், சர்வதேச நிலையில் ஏலத்திற்கு வந்த போது, அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இப்பொருட்கள் இந்தியாவிற்கு திரும்புவதை உறுதிப் படுத்தியதாக அறிக்கை ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார். நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தில், இது, மிக மகிழ்ச்சியான தருணம் என்றும் அவர் கூறி உள்ளார்.

மோடி-கல்வி

தேசிய கல்விக் கொள்கையினால், இந்தியாவின் கல்வி முறை, அனைவரையும் உள்ளடக்கிய, முழுமையான, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற கல்வி முறையாக மாறி இருப்பது குறித்து மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் எழுதி உள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது சமூக ஊடகப் பக்கத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். தேசிய கல்விக் கொள்கையின் அமலாக்கம் 5 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள நிலையில் தேசிய நாளேடு ஒன்றில் கல்வி

அமைச்சர் எழுதி உள்ள இந்தக் கட்டுரை, பாரம்பரிய ஞானத்தின் அடிப்படையிலான கற்றலை, தேசத்தை கட்டி அமைக்கும் பணிகளுக்கான மையப் புள்ளியாக புதிய கல்விக் கொள்கை மாற்றி இருப்பது குறித்து, விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

*மோடி-பராக்*

**கற்றல் விளைவுகள் குறித்த மதிப்பீடு, மறுஆய்வு மற்றும் பகுப்பாய்வு தொடர்பாக** அரசு அமல்படுத்திய, **PARAKH தேசிய கணக்கெடுப்பு** குறித்து, மத்திய கல்வித் துறை இணை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவையும், பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ளார். பள்ளிகளில், அதிகமான மாணவர் சேர்க்கைக்கு அப்பாற்பட்டு, நிஜமான கற்றல் நிகழ்வதை உறுதிப்படுத்தும் வகையில், கல்வித் துறை மறுவரையறை செய்யப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

*தரச் சான்றிதழ்*

புதுச்சேரியில் முதல் முறையாக ISO தரச் சான்றிதழ் பெற்றுள்ள மேட்டுப்பாளையம் இரா ஸ்ரீனிவாசன் அரசு உயர்நிலைப் பள்ளி, உள்கட்டமைப்பு மற்றும் கல்வித் தரம் குறித்த பல கட்ட சோதனைகளின் அடிப்படையில் இந்த சாதனையை எட்டி உள்ளது. இப்பள்ளியில் அமலாகும் பாடத் திட்டம், கற்பித்தல் முறைகள், மாணவர்களை தேர்வுக்கு தயார் படுத்தும் விதம் மற்றும் மாணவர் உதவிக்கான பல்வேறு வசதிகள்

குறித்து, டெல்லி அருகே நோய்டாவில் உள்ள உறுதிப்பாட்டு சான்றளிப்பு நிறுவனத்தின் அதிகாரிகள் பலமுறை நேரடி ஆய்வு மேற்கொண்டு, ISO தரச் சான்றிதழை வழங்கி உள்ளனர். பள்ளி தலைமை ஆசிரியர் திரு பாஸ்கர ராசு இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசுகையில் ............

(வாய்ஸ்-பாஸ்கர ராசு)

*ஆதி திராவிடர்*

புதுச்சேரியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமான திட்டத்தின் கீழ், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 237 பேருக்கு, மொத்தம் 36.61 லட்சம் ரூபாய் நிதி உதவிகளை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். சட்டப்பேரவையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு பி ஆர் சிவா, துறை இயக்குநர் திரு இளங்கோவன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமான பல்வேறு திட்டங்களின் கீழ் நடப்பு நிதியாண்டில் இதுவரை, மொத்தம் 3 கோடியே 17 லட்சம் ரூபாய் உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இத்துறையின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*பிஆர்டிசி*

புதுச்சேரியில், பணி நிரந்தரம், மற்றும், 7-வது ஊதியக் குழு சம்பளம் கோரி, பிஆர்டிசி ஊழியர்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் இன்று

3-ஆவது நாளாக நீடிக்கிறது. ஊழியர் பிரதிநிதிகள் நேற்று, முதலமைச்சர் திரு ரங்கசாமியுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு ஏற்படவில்லை. நிலவரங்கள் குறித்து எமது செய்தியாளர் வழங்கும் செய்திக் குறிப்பு .............

**(வாய்ஸ்-கந்தன்)**

*சுகாதாரத் துறை*

புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு இயக்கம் சார்பில், காரைக்காலில் இன்று நடைபெற்ற, மாவட்ட அளவிலான, எய்ட்ஸ் விழிப்புணர்வு ஓட்டப் போட்டியை துணை ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். 12 கல்லூரிகளில் இருந்து 120 மாணவ மாணவிகள், இந்த 5 கிலோ மீட்டர் ஓட்டப் போட்டியில் பங்கேற்றனர். இதில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. மாநில அளவில் அடுத்த மாதம் 21-ஆம் தேதி புதுச்சேரியில் நடைபெற உள்ள ஓட்டப் பந்தயத்தில் இவர்கள் பங்கேற்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. காரைக்கால் தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்ற, எய்ட்ஸ் விழிப்புணர்வு வினாடி-வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், இன்றைய விழாவின் போது பரிசுகள் வழங்கப்பட்டன.

வானிலை

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, ஆகஸ்ட் 5- ஆம் தேதி வரை தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் ஓரிரு இடங்களில், அதிகபட்சம் மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்தில், பலத்த தரைக் காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், நீலகிரி மாவட்டம் நடுவட்டம் உள்ளிட்ட இடங்களில், தலா 1 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5-ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டனில் நாளை தொடங்க உள்ளது. இத்தொடரில் இதுவரை முடிந்துள்ள 4 போட்டிகளில் இங்கிலாந்து 2-க்கு 1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

செயற்கை கோள்

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி அமைப்புடன் இணைந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகத்தின் நிசார் செயற்கை

கோள் இன்று மாலை ஸ்ரீஹரிகோட்டா **சத்தீஷ் தவான் விண்வெளி மையத்தில்** இருந்து, இந்தியாவின் **ஜிஎஸ்எல்வி- எப் 16** ராக்கெட் மூலம், வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. சூரியனின் இயக்கத்திற்கு இணையான பாதையில் பூமியை சுற்றி வரும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள நிசார் செயற்கை கோள், பூமியின் தரைப் பரப்பு மற்றும் பனிப் பரப்பில் ஏற்படும் மாற்றங்களை தொடர்ச்சியான முறையில் கண்காணிக்கவும், இயற்கைப் பேரிடர் வாய்ப்புகளை முன் கூட்டியே கணிக்கவும், பருவநிலை ஆய்வுகளுக்குத் தேவையான தரவுகளை சேகரிக்கவும், மிகவும் உதவிகரமாக இருக்கும் என இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*ரஷ்யா-நிலநடுக்கம்*

ரஷ்யாவின் தூர கிழக்கு எல்லைப் பகுதியான காம்சாட்கா தீபகற்பத்தில், இன்று அதிகாலை ஏற்பட்ட, 8.8 ரிக்டர் அளவுள்ள கடும் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பசிபிக் பெருங்கடலை ஒட்டி உள்ள பல்வேறு நாடுகளில் பிறப்பிக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கை, படிப்படியாக தளர்த்தப்பட்டு வருகிறது. பிலிப்பைன்ஸ் நாட்டின் கடலோரப் பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டது. ஜப்பானில் ஹொக்கைடோ உள்ளிட்ட பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை நீடிக்கின்ற போதிலும், காண்ட்டோ உள்ளிட்ட பகுதிகளில், எச்சரிக்கையின் தீவிரம் குறைக்கப்பட்டுள்ளது. நில அதிர்வை தொடர்ந்து ரஷ்யா, ஜப்பான்

உள்ளிட்ட நாடுகளின் கடலோர பகுதிகள் மற்றும் அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் பல இடங்களில் சுனாமி தாக்குதல் ஏற்பட்டதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன. பல்வேறு நாடுகளில் லட்ச கணக்கிலான மக்கள் கடலோர பகுதிகளில் இருந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்ல அறிவுறுத்தப் பட்டனர்.

*வந்தே பாரத்*

வந்தே பாரத் ரயில் சேவை, மூன்றே ஆண்டுகளுக்குள், நாட்டின் எல்லா மாநிலங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார். இன்று மக்களவையில் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளித்த அவர், தற்போது நாட்டில் 144 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப் படுவதாகவும், ரயில் விபத்துகளின் எண்ணிக்கை, 2014-15-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 77 சதவிகிதம் குறைந்து இருப்பதாகவும் கூறினார்.

மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா, துறை தொடர்பான துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், சஞ்சார் சாத்தி திட்டத்தின் உதவியுடன், நாடு முழுவதும் இதுவை 1 கோடியே 36 லட்சத்திற்கும் மேற்பட்ட, போலி மொபைல் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார். தொலை தொடர்பு வசதிகளின் துஷ்பிரயோகம் குறித்த தகவல்களை பகிர்ந்து கொள்வதன்

மூலம், சைபர் குற்றங்கள் மற்றும் நிதி மோசடிகளை தடுக்கும் வகையில், **டிஜிட்டல் உளவுத் தகவல் தளம்** தொடக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

மாநிலங்களவையில் ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து நேற்று தொடங்கிய சிறப்பு விவாதம் இன்று, தொடர்ந்து இடம் பெற்றது.

பகவான் புத்தருடன் தொடர்புடைய உடல் எச்சங்கள் மற்றும் புனித பொருட்கள், 127 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் இந்தியாவிற்கு திரும்பி இருப்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார்.

பள்ளிகளில், நிஜமான கற்றல் நிகழ்வதை உறுதிப்படுத்தும் வகையில், கல்வித் துறை மறுவரையறை செய்யப் படுவதாக, பிரதமர் கூறி உள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைத் திட்டத்தின் கீழ், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான நிதி உதவிகளை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.